ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வைபவம்

(ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ)

## காஞ்சியில் அத்வைத வித்வான்களைப் பேரருளாளர் மூலம் நிரஸித்தல்

**இப்படி ஸ்வாமி சிரகாலம் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தபொழுது, காஞ்சீபுரத்தில் வடதேசத்திலிருந்து சில ப்ரஸித்த அத்வைத வித்வான்கள் வந்து தங்களை வாதத்தில் ஜயிக்கவேண்டும்படி நிர்பந்தித்தார்கள். கோவில் அதிகாரிகளும் ஸ்வாமியை அங்கே எழுந்தருளும்படி ப்ரார்த்திக்க, ஸ்வாமி தம்முடைய சிஷ்யர்களில் ப்ரதானரான பேரருளாள ஜீயரை அனுக்ரஹித்தருளி, "நீர் போய் ப்ரதிவாதி நிரஸனம் செய்துவாரும்" என்று நியமித்தருளினார். அவரும் அப்படியே காஞ்சீபுரம் சென்று, வாதிகளை நிரஸித்தார். தாம் ஜயித்த வித்வான்களை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கம் திரும்பிவந்து அவர்களுடன் ஸ்வாமியை தண்டன் ஸமர்ப்பித்தார். ஸ்வாமியும் அவரை அனுக்ரஹித்து, ப்ரதிவாதி நிரஸன தோரணைகளைக் கேட்டருளி, அவருடைய ஸமயோசிதமான யுக்தியையும், ப்ரஹ்மஜ்ஞானத்தின் வைசத்யத்தையும் கண்டு, "நீர் பர்யாய பாஷ்யகாரர், ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரர்" என்று உகந்தருளினார். இந்தப் பிற்பட்ட திருநாமமே பின்னால் இவருக்குப் பட்டப்பெயராயிற்று, இப்படி ப்ரஸித்தமான வைபவத்துடன் இங்கே எழுந்தருளியிருந்து ச்ருதப்ரகாசிகையுடன் ஸ்ரீபாஷ்யத்தை இருபத்தெட்டாம் தடவை சிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்தருளும்பொழுது, ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளத்துக்கும், ஸ்ரீபாஷ்யத பங்க்திகளின் காம்பீர்யத்திற்கும், அது போதாது என்று பார்த்தருளி, த்ரமிட வேதங்களுக்குத் தாம் நிகம பரிமளம் என்னும் வ்யாக்யானம் செய்தருளினாற்போல, ஸ்ரீபாஷ்யத்திற்குத் தத்வடீகை (111) என்கிற வ்யாக்யானத்தையும், இவ்வர்த்தங்களை ஸுலபமாய் அனுஸந்திப்பதற்காக அதிகரண ஸாராவளீ (112) என்னும் க்ரந்தத்தையும் அருளிச்செய்தார்.**

## சில்பிராஜனை ஜயித்தல்

இப்படித் தம்மால் அருளிச்செய்யப்பட்ட பஹுப்ரகாரங்களான ஸ்ரீஸூக்திகளைத் தம்முடைய சிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கையில்,

சில அஸூயாளுக்களினால் தூண்டப்பட்டவனாய் ஒரு சில்பிராஜன் வந்து ஸ்வாமி தன்னை ஜயித்தாலல்லது ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்ற பிருதைத் தரிக்கக்கூடாதென்று நிர்பந்தித்து, தான் உத்தமமான பீடம் செய்து கொண்டுவருவதாயும், ஸ்வாமி அத்துடன் சேரும்படி ஒரு விக்ரஹம் பண்ணும்படிக்கும் ஏற்பாடு செய்துகொண்டு போனான். ஸ்வாமியும் பகவானுடைய எந்த அவதாரத்தை எந்தத் திருக்கோலத்துடன் எழுந்தருளப்பண்ணுவது என்று யோசித்துக் கொண்டிருக்கையில், ஸ்ரீரங்கநாதன் ஸ்வாமியின் ஸ்வப்நத்தில் தோன்றி, "பிள்ளாய்! என்ன யோசிக்கிறீர்? நமக்கு லோகத்தில் வேண்டிய விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன, அவை போதும். லோகோஜ்ஜீவனார்த்தமாக நானும் எந்த ஆசார்யரூபத்தைப் பரிக்ரஹிக்க வேண்டியிருக்கிறதோ, அப்படிப்பட்ட ஆசார்யர்களுள் ச்ரேஷ்டதமரான உம்முடைய விக்ரஹத்தையே நீர் ஸித்தாந்த ப்ரவசனம் செய்யும் ரீதியில் ஸ்ரீகோச ஜ்ஞானமுத்ரையுடன் எழுந்தருளப்பண்ணும்" என்று நியமித்தருளினான். ஸ்வாமியும் அந்த நியமனத்தைச் சிரஸாவஹித்து, அப்படியே ஒரு விக்ரஹத்தை ஏறியருளப்பண்ணி, மறுநாள் அதைச் சில்பியிடம் கொடுத்து, அதை அவன் செய்து கொண்டுவந்திருக்கும் பீடத்துடன் சேர்க்கும்படி ஸாதித்தருளினார். சில்பியும் ஸ்வாமியின் விக்ரஹத்தின் ஸௌஷ்டவத்தில் மிகவும் ஈடுபட்டு, அதிலேயே லயித்து நின்று, அதைத் தான் செய்துவந்த பீடத்துடன் சேர்க்கும்போது, இரண்டும் கொஞ்சம் சேராமல் இருக்கக்கண்டு, ஸ்வாமி செய்தருளிய விக்ரஹத்தில் தவறு என்று ப்ரமித்து, தன்னுடைய கை உளியால் அவ்விக்ரஹத்தின் கபோல ப்ரதேசத்தைத் தொட, ஸ்வாமியின் திருக்கபோலத்தில் **நின்றும் ருதிரம் வெளிப்படுவதைக் கண்டு, சில்பி, தவறு தன்னுடைய பீடத்தில் என்பதை அறிந்து, உடனே ஸ்வாமியின் திருவடிகளில் விழுந்து அபராத க்ஷமாபணம் செய்துகொண்டான். ஸ்வாமியும் அந்தப் பீடத்தை வாங்கி அதைத் திருத்தி விக்ரஹத்துடன் ஜடீபந்தம் செய்தருளினார். சில்பிராஜனும் பக்னனாய்ப் போய்ச்சேர்ந்தான். ஸ்வாமியும் அந்த விக்ரஹத்தின் பூர்ண ஸௌஷ்டவத்தை கடாக்ஷித்தருளி, அதைத் தாம் ஆலிங்கனம் செய்து, தம்முடைய திவ்யசக்தியை அதில் ஆவேசம் செய்தருளி, அதை நயினாராசார்யாரிடம் கொடுத்தருள, அவரும் அதை மஹாப்ரஸாதமாக அங்கீகரித்து வைத்துக்கொண்டிருந்தார். இந்த வ்ருத்தாந்தம் கீலக வருஷம், தனுர் மாஸம், சுக்ல பக்ஷம், பஞ்சமீ திதி, ச்ரவண நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் நடந்தது. இப்படி சில்பியை ஜயித்தருளி அந்த வித்யையின் ஸாராம்சத்தை சில்பார்த்த ஸாரம் (113) என்னும் ஒரு க்ரந்தமாக அருளிச்செய்தார்.**

## ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் அருளிச்செய்தல்

**இப்படி இந்த ஸம்ப்ரதாயத்தை அனுஷ்டான முகத்தாலும், உபதேச முகத்தாலும் ப்ரவசனம் செய்தருளி, இனித் தாம் செய்தருளவேண்டிய அம்சம் ஏதாவது இருக்கிறதா என்று ஸ்வாமி பராமர்சிக்கும்போது, இந்த ஸம்ப்ரதாய அர்த்தங்களைப் பல க்ரந்தங்கள் மூலமாக வெளியிட்டிருந்தபோதிலும்**

**அவைகளினாலே பர்யாப்தி பிறவாமல், கீதாசார்யன் பதினேழு அத்யாயம், அறுபத்தைந்து ச்லோகங்களினால் அகல்ஞாலத்தவர் அறிய நெறியெல்லாம் எடுத்துரைத்தும் அத்தால் சாந்தி அடையாத அர்ஜுனனைக் குறித்து ச்ரோதவ்ய சேஷமில்லாதபடி சரமச்லோகத்தை அருளிச்செய்ததோபாதி, ஸ்வாமியும் ஸகலார்த்தங்களையும் சேர்த்து ஒரு க்ரந்தத்திலேயே அருளிச்செய்யத் திருவுள்ளம் பற்றி, இவ்வர்த்தங்கள் எல்லாம் ஆசார்ய பரம்பரையினால் தமக்குக் கிடைத்தமையை அனுஸந்தித்து, அந்த குருபரம்பரையின் விஷயமாக குருபரம்பராஸாரம் (114) என்னும் க்ரந்தத்தையும், ஸர்வ சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹமாய் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் (115) என்னும் க்ரந்தத்தையும் அருளிச்செய்தார். ஸ்ரீராமன் விபீஷணாழ்வானுக்கு முடிசூட்டிய பின்னரே தம்மை க்ருதக்ருத்யராக நினைத்தாற்போலே, ஸ்வாமியும் இந்த க்ரந்தத்தை அருளிச்செய்த பிறகு தான் தம்முடைய திருவவதார ப்ரயோஜனம் தலைக்கட்டிற்று என்று தாம் நினைத்திருந்தமையை இதன் இறுதியில் ஸூசிப்பித்தருளியிருக்கிறார்.**

## திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளுதல்

**இப்படித் தம்முடைய அவதார ப்ரயோஜனத்தைத் தலைக்கட்டியருளி, பரதாழ்வானுக்குத் தாம் செய்த ப்ரதிஜ்ஞையை நினைத்து, புஷ்பக விமானத்தில் ஏறி அதி த்வரையாகத் திருவயோத்யைக்கு பகவான் எழுந்தருளினதோபாதி ஸ்வாமியும் இப்பொழுது தமக்கு நாயகனுடைய வாசஸ்தானமாகையாலே ப்ராப்தஸ்தலமான திருவஹீந்த்ரபுரம் எழுந்தருள உத்யோகித்து, ஸ்ரீரங்கநாதனைத் திருவடிதொழுது, அவர் நியமனம் பெற்று, திருவஹீந்த்ரபுரம் அடைந்து, அங்கே அடியவர்க்கு மெய்யனைத் தம் விடாய்த்த கரணங்களால் அனுபவித்துக்கொண்டு தம்முடைய சரம ப்ரபந்தமான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தை ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயர் முதலியவர்களுக்கு ப்ரவசனம் செய்துவந்தார். அதில் நிரூபிக்கப்பட்டிருக்கும் அர்த்தவிசேஷங்களில் சில ஸந்தேஹங்கள் ஆபாத ப்ரதீதியில் உதிப்பதை கடாக்ஷித்தருளி, அவைகளையெல்லாம் ஸங்க்ரஹித்து, அவைகளுக்கு ஸமாதானத்தை விரோத பரிஹாரம் (116) என்னும் ஒரு க்ரந்தத்தில் நிரூபித்து அருளினார்.**

## அர்ச்சா விக்ரஹத்தின் திருப்ரதிஷ்டை

இப்படித் தெய்வநாயகனை அனுபவித்துக்கொண்டு இங்கே எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஸ்வாமியின் நூற்றோராவது திருநக்ஷத்ரமான ஒரு புரட்டாசித் திருவோணத் திருநாளில் ஸ்வாமியின் சிஷ்யகோடிகள் அனைவரும் அந்தத் திருநக்ஷத்ரத்தைக் கொண்டாடி, ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்களை ஒருவர்க்கு ஒருவர் சொல்லி அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீநயினாராசார்யர் ஏதோ ஒரு ப்ரஸக்தியில் ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில் சில்பிராஜனை ஜயித்தருளின ப்ரகாரத்தையும், தம்முடைய திவ்யவிக்ரஹத்தை ஏறியருளப்பண்ணினதையும்,

அதைத் தம்மிடம் கொடுத்ததையும் தெரிவிக்க, அங்கிருந்த எல்லோரும் அந்த விக்ரஹத்தைத் தங்களுக்கு ஸேவை செய்துவைக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீநயினாராசார்யரும் அந்த விக்ரஹத்தை ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிக்கும் கூடத்தில் எழுந்தருளப்பண்ணிவைக்க, அவர்கள் எல்லோரும் அந்த விக்ரஹத்தை ஸேவித்து, அது ஸ்வாமியின் திருமேனியில் நின்றும் ஒத்தி எடுத்தாற்போல ஸேவை ஸாதிப்பதைக் கண்டு, அந்த வடிவழகில் ஈடுபட்டு நிற்பதைக் கேட்டு, ஊரிலுள்ள மற்றவர்களும் திரள் திரளாகச் சென்று கொண்டிருப்பதைக் கண்டு, பற்பில் மறந்த செய்யாள் படி காட்டிய நம் ஸ்வாமியை அனுக்ரஹிப்பதற்கென்றே அயிந்தையில் அன்றே அமர்ந்த அடியவர்க்கு மெய்யனும், அந்த அதிசயத்தைத் தானும் கண்டுகளிக்கத் திருவுள்ளம் பற்றி, அந்த விக்ரஹத்தைத் தம் திருமுன்பே கொண்டுவரும்படி நியமித்தருளி கொண்டுவரும்படி நியமித்தருளி, பரமபதநாதன் ஸ்ரீக்ருஷ்ணாவதார ரூபத்தைப் பார்த்து மகிழ்ந்ததோபாதி, இப்பொழுது இந்த ஆசார்யரூபமான தம்முடைய ரூபத்தைக் கண்டு பரம ப்ரீதராய், தான் அடியவர் பால் மெய்யை வைத்தவனாகையாலே, ஸ்வாமி வர்த்தமான நிர்த்தேசமாய்த் தம்மை மங்களாசாஸனம் செய்தருளியிருப்பதை அந்வர்த்தமாக்கவேண்டியதற்காகவும், தன்னை ஒரு க்ஷணமும் மறவாத ஸ்வாமியைத் தான் மறக்காமலிருப்பதற்காகவும் தம்முடைய ஸந்நிதியிலேயே திருப்ரதிஷ்டை செய்யும்படி நியமித்தருள, அப்படியே ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயர் முதலானோர் திருப்ரதிஷ்டை செய்துவைத்தார்கள். அப்பொழுது ஸ்ரீநயினாராசார்யரும் ஸ்வாமியின் விஷயமாகவும், அவருடைய அர்ச்சா விக்ரஹத்தின் விஷயமாகவும் பிள்ளையந்தாதி என்னும் ஒரு ப்ரபந்தத்தை விண்ணப்பம் செய்தார்.

## திருவவதார ஸமாபனம்

இப்படி ஸ்ரீதேவநாதனால் பஹுமானிக்கப்பட்டவராய், அவனுடைய திருவடிகளில் அசஞ்சல பக்தியுடன் எழுந்தருளியிருக்கும்பொழுது ஒரு திருக்கார்த்திகைத் திருநாளில் கலியனுக்கு அருளப்பாடாகி, திருநெடுந்தாண்டகம் அனுஸந்தானம் செய்துவிட்டுத் தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளினதும், கலியனுடைய அவதார ஸமாபனம் ஜ்ஞாபகத்திற்கு வர, தாமும் அவதார ஸமாபனத்தைச் செய்தருளத் திருவுள்ளம் பற்றி, தம்முடைய சிஷ்யர்கள் எல்லோரையும் கூப்பிட்டருளி, அவர்களை அனுக்ரஹித்து, தம் திருவாராதன எம்பெருமான்களில் ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனையும், ஒரு திருவாழி திருச்சங்கையும் ப்ரஹ்மதந்த்ரஸவதந்த்ர ஜீயரிடமும் ஒரு திருவாழி திருச்சங்கை ஸ்ரீநயினாராசார்யரிடமும் கொடுத்தருளி, ஸ்ரீ வைநதேயன் ப்ரஸாதித்த ஸ்ரீ யோக ஹயக்ரீவ மூர்த்தியைத் தம்முடைய அர்ச்சையுடன் கூட ப்ரதிஷ்டை செய்யும்படி நியமித்தருளினார். பிறகு அப்புள்ளாருடைய திருவடிநிலைகளுக்கு விசேஷ ஆராதனம் செய்தருளி, ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தாமும் ஸ்வீகரித்து, சிஷ்யர்களுக்கும் ப்ரஸாதித்து, அத்திருவடிநிலைகளைத் தம் திருமுடியிலும் திருக்கண்களிலும் ஒத்திக்கொண்டு, அருகில் இருந்தவர்களை "சூழ் விசும்பணிமுகில்" திருவாய்மொழியை

அனுஸந்திக்கும்படி நியமித்தருளி, ஸ்ரீநயினாராசார்யருடைய மடியில் திருமுடியையும், ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரர் மடியில் திருவடியையும் வைத்துக்கொண்டு இந்த ஆசார்ய அவதாரத்திற்கு வ்யாஜமாயிருந்த கண்டாரூபமாக மாறி உடனே அந்தர்தானம் ஆனார்.

இப்படி லோகோஜ்ஜீவனார்த்தமாக இந்த தேசிகரூபமாய் அவதரித்து, எம்பெருமான் தொடக்கமாய் ஸாக்ஷாத் ஆசார்யரான கிடாம்பி இராமாநுசப்புள்ளார் பர்யந்தமாய் அவிச்சின்னமாய் வரும் குருபரம்பரையில் உள்ள ஒவ்வொரு ஆசார்யர்களினுடைய க்ருபைக்குப் பூர்ண பாத்ரராய், அவர்களில் ப்ரதானர்களான ஸ்ரீபராங்குச நாத யாமுந ராமாநுஜ முனிகளுடைய ஸூக்திகளைப் பலபடியாலும் பரவச்செய்து, அவைகளில் ப்ரதானமானவைகளுக்குத் தாம் வ்யாக்யானமிட்டு, ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தை விரித்துரைத்து, லோகத்தின் பின்ன ருசியை அனுஸரித்து அனேகம் ஸூக்திகளை அனேகம் விதங்களாக அருளிச்செய்து, ஸ்ரீமந் ந்யாஸ வித்யையை இந்த லோகத்தில் ஸுப்ரதிஷ்டிதமாக்கிப் பரோபகாரம் செய்தருளிய இம்மஹாசார்யன் விஷயத்தில் அகிஞ்சனர்களான நாம் செய்யக்கூடிய கிஞ்சித்காரம் ஏது? ஸர்வஜ்ஞரான ஸ்வாமி தாமும் "ஏற்றி மனத்து எழில் ஞானவிளக்கை இருளனைத்து மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான், போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்ச்சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே" என்று அருளிச்செய்ததைக் கடைப்பற்றி, அவர் உகந்தருளின திவ்யதேசங்களில் அவருக்கு உபசாரம் நடக்கும் அர்ச்சாவிக்ரஹத்திற்குத்

நன்றி: ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்வாமி வெளியிட்ட சந்தமிகு தமிழ்மறை.

***************



சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு

தொடரும். . .